# 2017 ஆம் ஆண்டிற்கான வழங்குநர்கள்/ ஒப்பந்தக்காரர்ககளை பதிவு செய்தல்
# பாதுகாப்பு அமைச்சு

1. 2007 ஜுலை 30 இலக்கம் 1508/08 இனைக் கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய, பாதுகாப்பு அமைச்சு மற்றும் அதனோடிணைந்த கீழே குறிப்பிடப்படுகின்ற நிறுவனங்கள் தொடர்பாக 2017 ஆம் ஆண்டிற்காக பதிவு செய்து கொள்வதற்கு நிர்மானம். திருத்த வேலைகள் மற்றும் பொருட்கள், சேவைகள் ஆகியவற்றை வழங்குவதற்காக வெளிநாட்டு உற்பத்தியாளர்கள், அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள், தேசிய உற்பத்தியாளர்கள், தேசிய வழங்குநர்கள், ஒப்பந்தக்காரர்கள் மற்றும் ஆலோசனை நிறுவனங்களிடமிருந்து பாதுகாப்பு அமைச்சின் செயலாளரினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

* **பாதுகாப்பு அமைச்சு** **www.defence.lk**

- ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் படையணி
- ஒருங்கிணைந்த சேவைகள் மொழிகள் பயிற்சி நிறுவனம்
- அரச புத்தி சேவை

* இலங்கைத் தரைப்படை
* இலங்கைக் கடற்படை
* இலங்கை வான்படை
* சிவில் பாதுகாப்புத் திணைக்களம்
* கடற்கரைப் பாதுகாப்புத் திணைக்களம்
* சேர் ஜோன் கொத்தலாவலை பாதுகாப்புப் பல்கலைக்கழகம்

* ராஜாங்க பாதுகாப்பு அமைச்சு

- பாதுகாப்புச் சேவைகள் கட்டளை மற்றும் பதவிநிலை வித்தியாலயம்
- தேசிய மாணவ வீரர் படையணி
- ரணவிரு சேவை அதிகார சபை
- பாதுகாப்புச் சேவைக் கல்லூரி

02. <u>விண்ணப்ப படிவங்களைப் பெற்றுக்கொள்ளல்</u>

அ உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விண்ணப்பதாரிகளுக்கு **2016.08.08** தொடக்கம் **2016.09.26** வரை பாதுகாப்பு அமைச்சின் இணையத் தளத்திலிருந்து விண்ணப்ப படிவத்தை பதிவிறக்கம் (Download) செய்ய முடியும்.

**பாதுகாப்பு அமைச்சு – www.defence.lk**

ஆ பதிவு செய்வதற்குரிய விண்ணப்பப் படிவத் தொகுதி ஏறத்தாழ 60 பக்கங்களைக் கொண்டிருப்பதுடன் அது பின்வரும் பகுதிகளை உள்ளடக்கியுள்ளது.

1. பிரதான விண்ணப்பப் படிவம்
2. வெளிநாட்டு வழங்கல் நிறுவனத்தின் தரவுப் பத்திரம் (இணைப்பு “ஏ”)
3. ஆலோசனைகள் மற்றும் நிபந்தனைகளடங்கிய பத்திரம் (இணைப்பு “பீ”, “பீ1”)
4. ஏறத்தாழ 50 பக்கங்களைக் கொண்ட விபரமான பிரிவுப் பட்டியல்

03 <u>பிரிவுப் பணம் செலுத்துதல்</u>

அ. உள்நாட்டு வழங்குநர் ஒருவரிடம் ஒரு பிரிவுக்காக அறவிடப்படும் கட்டணம் ரூ. 1500/- ஆகும்.

ஆ. வெளிநாட்டு வழங்குநர் ஒருவரிடம் ஒரு பிரிவுக்காக அறவிடப்படும் கட்டணம் 15 அமெரிக்க டொலர்களாகும்.

இ. பாதுகாப்பு அமைச்சு <u>அலுவலகத்தில் பிரிவுப் பணங்கள் பொறுப்பெடுக்கப்படாத காரணத்தால்</u> 2017 ஆண்டில் வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கு பாதுகாப்பு அமைச்சின் இலங்கை வங்கி தப்ரொபேன் கிளையின் 7040119 எனும் இலக்க கணக்கில் வரவுவைத்து இலங்கை வங்கியின் அனைத்துக் கிளைகளிலும் பிரிவுப் பணங்களைச் செலுத்த முடியும்.

ஈ. வெளிநாட்டு வழங்குநர்களும் 2017 ஆண்டின் பதிவுகள் தொடர்பில் **தூதுவராலயங்களூடாக பிரிவுப் பணங்கள் செலுத்துதல் நிறுத்தப்பட்டுள்ளது.** அதற்குப் பகரமாக வெளிநாட்டு விண்ணப்பதாரிகள் Swift Code பயன்படுத்தி இலங்கை வங்கியில் பணம் செலுத்த முடியும்.

**Swift No - BCEYLKLX**

**Branch Code - 747**

**Account No - 7040119**

உ. பிரிவுக் பணங்களைச் செலுத்தும் போது சமர்ப்பிக்கப்படும் பணவைப்புப் படிவத்தின் பிரதியை விண்ணபத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.(பணம் வைப்பிலிடப் பட்டதை உறுதிப்படுத்தும் வகையில்)

ஊ. உள்நாட்டு வழங்குநர்கள் மற்றும் வெளிநாட்டு வழங்குநர்கள் **2016.08.08** திகதியிலிருந்து **2016.09.26** திகதி வரையான காலப்பகுதியில் பிரிவுப் பணங்களைச் செலுத்தி முடிக்க வேண்டும். **2016.09.26** திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் பிரிவுப் பணங்கள் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சு பொறுப்புக் கூறமாட்டாது.

04 பிழையின்றி பூரணப்படுத்திய விண்ணப்பப் படிவங்களை ஏற்புடைய ஆவணங்களுடன் 2017 செப்டம்பர் மாதம் 26 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பப் படிவங்களை அனுப்பும் கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் "2017 ஆம் ஆண்டிற்கான வழங்குநர்களை பதிவு செய்தல் உள்நாட்டு/வெளிநாட்டு எனக் குறிப்பிடப்பட வேண்டும்.

**கணக்காளர் (வழங்கல் & இழப்பீடுகள்)**
**பாதுகாப்பு அமைச்சு**
**இலக்கம் 15/5,பாலதக்ச மாவத்தை**
**கொழும்பு 03**

05 2017 ஆண்டில் வழங்குநர்களைப் பதிவு செய்தல் தொடர்பாக இறுதி முடிவை எடுக்கும் அதிகாரம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு உரித்தாகும்.

பொருளியளாலர். கருணாசேன ஹெட்டிஹாராச்சி
செயலாளர்
பாதுகாப்பு அமைச்சு

2016 ஓகஸ்ட் மாதம் 01 ஆந் திகதி
பாதுகாப்பு அமைச்சு
15/5, பாலதக்ஷ மாவத்தை, கொழும்பு 03.